# இலங்கை வித்தியா போதினி

# THE CEYLON JOURNAL OF EDUCATION

(*Tamil Section.*)

பிரதம பத்திராதிபர் :
திரு. எச். டப்ளியு. ஹௌக் அவர்கள்.

பத்திராதிபர் சபை :
திரு. எம். எவ். டீ. எஸ் ஜயரத்ன அவர்கள்.
பண்டிதர். அ. சிற்றம்பலம் அவர்கள்.
திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள்.
திரு. எம். எஸ். எம். ஹட்டாட் அவர்கள்.

மனேஜர் :— திரு. சி. குணசேகர அவர்கள்.

வருடச் சந்தா ரூபா 3-00

சந்தாப் பணத்தை கொழும்பு, வித்தியா கந்தோர் இலங்கை வித்தியா போதினி மனேஜர் என்ற விலாசத்துக்கனுப்பவேண்டும்.

அறிவித்தல்:—செக் மூலம் பணம் கொடுத்தல். சில வங்கிகள் ரூ. 10/-க்குக் குறைந்த செக்குகளுக்கும் கொழும்பு தவிர்ந்த ஏனைய இடங்களிலிருந்து வரும் செக்குகளுக்கும் கொமிஷன் எடுக்கின்றபடியால் சந்தாதார் அவ்வகைச் செக்குமூலம் பணம் கொடுக்கும்போது கொமிஷனையும் செக்குகளில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இப்பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும் கட்டுரையாளர் வெளியிடும் அபிப்பிராயங்களைப் பிரதம பத்திராதிபரும் பத்திராதிபர் சபையினரும் கட்டாயமாக ஒப்புக்கொள்ளுகின்றனரென வாசகர்கள் கருதக்கூடாது

தொகுதி-8 | செப்டெம்பர் — 1950. | பகுதி-8

## பத்திராதிபர் குறிப்புகள்.

குழந்தையின் இயல்பு வளர்ச்சி ஆகியவற்றையும், சமூகம் இப்பொழுது அமைந்திருக்கும் முறை, அதை நாம் மாற்றி அமைக்க எண்ணும் விதம் ஆகியவற்றையும் எல்லைகளாகக்கொண்டே கல்வி

சம்பந்தமான எமது ஆலோசனைகள் நிகழவேண்டுமெனப் பல அறிஞர் கூறுகின்றனர். துரதிர்ஷ்டவசமாக எமது பாடசாலைகளில் இவ்வெல்லைகளுள் ஒன்றேனும் வற்புறுத்தப்படுவதில்லை. எமது கல்வி முறையிற் பெரும்பாகம்—விசேடமாக நாட்டுப்புறங்களிலுள்ள ஆரம்ப பாடசாலைகளில் அளிக்கப்படும் கல்வி குழந்தையின் இயல்போடும் வளர்ச்சியோடும் சிறிதேனும் தொடர்பற்றதாகின்றது. கல்வி கற்பதற்கே குழந்தை பாடசாலைக்கு வருகின்றதென இப்பொழுது வழக்கமாக நாம் எண்ணுகின்றோம்; கல்வியென்றால் வாசிப்பும், எழுத்தும், கணக்குமெனவே பொதுவாகக் கருதப்படுகின்றது. நாட்டுப்புறத்திலுள்ள எமது பாடசாலைகளுட் பெரும்பாலன நீண்ட ஓர் மண்டப உருவத்தில் அமைக்கப்படுவதன் காரணத்தை இது ஒருபோது விளக்கும். பாடசாலை ஒரு சமூகமென்பதை அதன் கட்டடத்தை அமைப்போர் சிறிதேனும் கருதுவதில்லை. பலரும் சமூகமாக ஒன்றுகூடும் மண்டபம், விளையாட்டு நிலம், வேலைசெய்யும் அறைகள் ஆகிய யாவும் பொருந்தத்தக்கனவாக எமது பாடசாலைகள்—அவற்றுள்ளும் விசேடமாக நாட்டுப்புறத்தேயுள்ள பாடசாலைகள் அமைவது மிகவும் அபூர்வம்.

இனிக் குழந்தையின் இயல்பையும் வளர்ச்சியையும் ஆராயும் விஷயத்தை நோக்குவோம். ஒவ்வொரு ஆசிரியரும் தாம் கற்பிக்கும் பிள்ளைகளின் தன்மைகளை ஆராயும் மாணவராயிருத்தல் வேண்டும். பிள்ளைகளைச் செவ்வனே அறிதற்குக் குழந்தை ஆராய்ச்சியிற் பயிற்சி வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இப்பயிற்சியை குழந்தைகளை அநுபவமுறையாக ஆராய்ந்து பெறாது புத்தகக் கல்விமூலமாகவே பெறுகின்றோம். புத்தகக் கல்வி முக்கியமானதும் உபயோகமானதுமே; ஆனால் பிள்ளைகளை ஆராய்தற்கு அதனை அநுபவமுறையில் உபயோகப்படுத்தினாலேயொழிய அப்புத்தகக் கல்வி மாணவரை அறிதற்கு ஆசிரியருக்கு உதவிபுரியாது. எமது பாடசாலைகளில் வேலை நிகழும்போது நாம் அவற்றுக்குச் சென்று பார்த்தால், குழந்தைகளின்

இயல்பையும் வளர்ச்சியையும் ஆசிரியர் அறியாதிருத்தலினல் அக் குழந்தைகளுக்கு எத்தகைய தீங்கு விளைகின்றதென்பதைக் காணலாம். உதாரணமாக ஆசிரியர் வகுப்பு ஒழுங்குமுறைக்கு நல்லதெனத் தாம் கருதும் நிலைகளில் பிள்ளைகளை எழுந்து நிற்கவும் இருக்கவும் செய்கின்றனர்; ஆனல் துரதிர்ஷ்டவசமாக இந்நிலைகள் பிள்ளைகளின் உடல் வளர்ச்சிக்குத் தீங்கு பயப்பனவாகும். அச்செழுத்துக்களின் பரிமாணத்தைக் கருதாது புத்தகங்கள் பிள்ளைகளுக்கு வாசிப்புப் பாடபுத்தகங்களாக அமைக்கப்படுகின்றன; வாசிக்கும்போது உடல் அமைந்திருக்கும் நிலை சிலசமயங்களில் பிள்ளைகளின் கண்பார்வைக்குத் தீங்கு பயப்பதாகும். எழுதும்போதும் சரியான அளவுள்ள மேசை முதலியன இருக்கின்றனவோ என்னும் விஷயத்தில் கருத்துச் செலுத்தப்படுவதில்லை. தோட்டநிலம் அமைந்துள்ள பாடசாலைகளில் ஓடி விளையாடி உடல் உறுப்புகளுக்கு அப்பியாசம் அளிப்பதற்குப் பிள்ளைகள் அந்நிலத்தை உபயோகிப்பதில்லை. மரங்களில் ஏறும் பிள்ளைகளை நாம் காணமுடியாது; ஏனெனில் மரங்களில் ஏறக்கூடாதென்பது அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளுள் ஒன்று. தோட்டத்தில் நேரத்தைக் கழிக்கும்போதும் வகுப்பறையிற்போலவே ஒழுங்காகவும் அமைதியாகவும் இருக்கவேண்டுமெனப் பிள்ளைகளுக்குக் கட்டளையிடப்படுகின்றது.

எல்லாவற்றிலும் விசேடமாக எமது ஆரம்ப பாடசாலைகளில் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கும்போது அவதானிக்கவேண்டிய முக்கிய கருத்துக்களுள் ஒன்றை ஆசிரியர்கள் மறந்துவிட்டனர். நாம் இப்பொழுது பாடங்களைப்பற்றியே நினைக்கின்றேம்; எமது நேரசூசிகளும் அறிவுபெறும் நேரங்களையே காட்டுகின்றன. சிறுபிள்ளைகளின் கல்வியை முயற்சிகள், அநுபவம் ஆகியவற்றின் மூலமே நோக்கவேண்டுமென்னும் விஷயத்தில் அதிக கருத்துச் செலுத்தப்படவில்லை. “அறிவை அளிப்பதற்கு” வேண்டும் அடக்கியாளும்முறை முயற்சியை வெறுக்கிறது; ஏனெனில் முயற்சி பிள்ளைக்குச் சுதந்தரத்தை வேண்டி

நிற்கும். சாதாரண வகுப்பறை, வேலையறையாகவேண்டும்; வேலைக்குப் பேச்சுச் சுதந்தரம் வேண்டும். வகுப்பில் சத்தம் அதிகப்படுவதற்கு நாம் அஞ்சுகின்றோம்; ஆனால் சத்தமுள்ள வகுப்பு வேலையில் முற்றாய் அமிழ்ந்தியிருக்கலாம். இலங்கையிலுள்ள சிறுவர் சிறுமியர் உண்மையான கல்வியைப் பெறவேண்டுமேயானால் எமது ஆரம்ப பாடசாலைகளின் வேலைத்திட்டத்தை முற்றாக மாற்றியமைக்கவேண்டும். முதலாவதாகப் பாடசாலையின் சூழல் திருந்தவேண்டும். ஒருமித்து வாழ்ந்து ஒருமித்து வேலைசெய்யும் ஒரு சமூகமாகவே பாடசாலை கருதப்படவேண்டும். சமூகவாழ்வின் புறப்பகுதிக்கு வேண்டிய அம்சங்கள் யாவும் அதனிடம் அமையவேண்டும். அங்கு ஓர் விளையாட்டிடம் வேண்டும்; வணக்கத்துக்கும் பொது நிகழ்ச்சிகளுக்கும் அதிலுள்ள சமூகத்தினர் ஒன்றுகூடுவதற்கு அங்கு ஓர் மண்டபம் வேண்டும்; ஒன்றிலிருந்தொன்று வேறாகப் பிரிக்கப்பட்ட வேலையறைகள் வேண்டும்; அவற்றில் உபாத்தியாயர் சொல்லும் பாடங்களை மாணவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதை விடுத்து, மாணவர்கள் வேலைசெய்யத்தக்கதாகத் தளபாடங்கள் அமைந்திருத்தல் வேண்டும்.

சிறுபிள்ளைகள் ஒன்றாக வாழ்ந்து ஒன்றாக வேலைசெய்தற்கு அத்தகைய சமூகமே சிறந்த பயிற்சியளிக்கும் இடமாகும். சமூக விஷயங்களிலும் அரசியல் விஷயங்களிலும் ஜனநாயக வாழ்க்கை முறையே சிறந்த முறையென நாம் அங்கீகரித்துள்ளோம்; ஆகையால் அத்தகைய சமூகத்தில் தமக்குரிய இடத்தை வகிக்கத்தக்கதாக எம் சிறுவர்களை நாம் பயிற்றவேண்டும். அங்ஙனம் பயிற்றுவதற்கு மிகவும் சிறந்த முறை எமது பாடசாலைகளைச் சமூகங்களாக அமைப்பதே. தனிப்பட்டவருக்கு மதிப்புக்கொடுத்து எல்லோருடைய அபிப்பிராயங்களுக்கும் இடமளித்து இவற்றை நடத்தலாம். இச்சமூகத்தில் ஒவ்வொருவரும்—அவர் எத்தகைய நிலைமையை வகிப்பவராயிருப்பினும்சரி—சமமாகவே மதிக்கப்படுவர். ஒரு விஷயத்தைக் கலந்தாலோசித்து ஆராயும் பழக்கம் இவரிடையே ஊக்கப்படும்; பிள்ளைகள்

யாரிடம் அதிகாரத்தைச் சமர்ப்பிக்கின்றனரோ அவர் மூலமாக இயன்றவரையில் தங்களைத் தாங்களே ஆளுவதற்குப் பயிற்றப்படுகின்றனர். எமது பாடசாலைகள் வாழ்க்கையின் இந்த அம்சத்தில் போதிய அளவுக்குக் கருத்துச் செலுத்தாவிட்டால் இலங்கையில் ஜனநாயக முறை வேறு முறைகளுக்கெதிராகப் போராடி அவற்றை வெல்லுதல் முடியாததாகும்.

---

# கல்வியும் பரம்பரையும்.

மூன்று உலகங்களிலும் வெற்றிவீரன் எனப் புகழ் பெற்ற அருச்சுனன் யுத்தகளத்திலே தன்னுடைய வில்லை யெறிந்துவிட்டு தேர்த் தட்டில் உட்கார்ந்தான். 'இந்நெருக்கடியான தருணத்தில் இந்தக் கோழைத்தனம் உனக்கு எங்கிருந்து வந்தது? உயர்ந்தோர்க்கு ஒவ்வாததும் சுவர்க்கத்தைக் கொடாததும் கீர்த்தியை ஒழித்து விடுவதுமான இக்கோழைத்தனத்தை விடு. எழுந்து யுத்தஞ்செய்' என்று கிருஷ்ணன் அவனைத்தெருட்டினான். அருச்சுனன் அப்போது சொன்ன நியாயங்களுள் ஒன்று கல்வியோடு நெருங்கிய சம்பந்தமுடையது. இவர்களைக் கொன்றால் குலம் நாசமடையும். குலம் நாசமடையும்போது குல தருமங்கள் நாசமடையும். தருமம் அழிந்தால் குலம் முழுதும் அதருமம் பரவி நிற்கும். பெண்கள் கற்பையிழந்து விடுவார்கள். அதனால் சாதிக்கலப்பு உண்டாகும். அதனால் தொன்று தொட்டு வந்த சாதி தருமங்களும் குல தருமங்களும் அழிவடையும்.

ஒரு வகையில் பார்க்கப்போனால் கல்வியின் நோக்கம் பரம்பரையாய் வந்த சமூகக் கோட்பாடுகளையும் எண்ணங்களையும் ஒழுக்கமுறைகளையும் அஞ்சல் செய்வதேயெனலாம். வித்தை விநயத்தைக் கொடுக்கிறது. விநயம் தகுதியையுதவும். அதனால் பொருளும் அறமும்

இன்பமும் அடையலாம் என்கிறார் இதோபதேசம் எழுதிய ஆசிரியர். சமூக சம்பிரதாயங்களைச் சிறுவர்க்கு ஊட்டுவதும் அதன்மூலம் அவர்களிடத்துப் பொதுத்திறமைகளையும் விசேஷத்திறமைகளையும் வளர்த்துவிடுவதும் அதன்பயனாகச் சமூகத்தை அழியவிடாது காப்பாற்றுவதுந்தான் கல்வியின் நோக்கமென்று வேறோரிடத்தில் உய்த்துணரவும் வைக்கிறார். அவர்கூறுவதாவது: சத்திர வித்தை சாத்திர வித்தை என்று இரண்டுவித வித்தைகள் மனிதரால் அடையப்படவேண்டியவை. அவற்றுள் முதலிற்கூறப்பட்ட சத்திர வித்தையோ வயதுபோன கிழப்பருவத்தில் பயன்படாது. பார்ப்பவர்க்குப் பரிகாசத்திற்கு இடமாகும். ஏன்? விழுகிழவன் கையிலே வாளெடுத்தால் பார்ப்பவர் சிரிக்கமாட்டார்களா? சாத்திர வித்தையோ சதா பயனுடையது என்பதே.

சமூக சம்பிரதாயமாயமைந்த சில அறிவுகளும் அனுபவங்களும் வினைத்திறமைகளும் எல்லாச் சமூகங்களிலும் ஆதியிலிருந்தே பழக்கத்தில் வந்து கொண்டிருக்கின்றன. இவை பார்த்ததைச் செய்யும் குரங்குச் சுபாவத்தினாலும் போதனையினாலும் பெற்றோரிடத்திருந்து பிள்ளைகட்கும் குருவிடத்திருந்து சீடனுக்கும் பரம்பரையாய் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றை அழியவிட்டால் சமூகம் அழிந்துவிடும். இவற்றுக்குத்தான் நாகரிகம், பண்பாடு, தருமம் என்றெல்லாம் பெயர் கூறப்படுகிறது. பாஷை, நடை, உடை, பாவனை, சமயக்கோட்பாடுகள் முதலியன எல்லாம் பரம்பரையாக வந்த சமூக சம்பிரதாயங்களே பல நூற்றாண்டுகளாக ஒருசாதியாரின் பழக்கத்திலிருந்து வந்தவை. அவை சமூகவாழ்வுக்கு அவசியமானபடியால் சமூகத்தினர் அவற்றைத் தமது சிறுவர்க்கும் பழக்கிவிடுவதில் ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள்.

இங்கே இதுவரை கூறிய சம்பிரதாயங்கள் சமூக சம்பிரதாயங்கள் குழந்தை சமூகத்தில் பிறக்கிறது. பிறந்து மொழிபயின்று கலைபயின்று

கருமஞ்செய்கிறது. எந்தச் சமூகத்திற் பிறக்கிறதோ அந்தச் சமூகத்தின் சம்பிரதாயங்களைக் கல்வியாகப் பயிலுகிறது. வாசனைமிகுந்த பூக்களையுடைய சோலையில் வீசும் தென்றல் அம்மலர் மணத்தையும் வாரிச்செல்வதுபோல ஒரு குழந்தை பிறக்கும்பொழுது பெற்றோருடைய சுடாவங்களையும் வாரியெடுத்துக்கொண்டுதான் வந்து பூமியில் தோன்றுகிறது. இதைப்பரம்பரைக்குணம் அல்லது பாரம்பரியம் என்னலாம். சமூக பாரம்பரியம் ஒன்று, குலத்துக்குரிய பாரம்பரியம் வேறொன்று. குழந்தை பிறக்கும்பொழுது குல பாரம்பரியத்தைப் பெற்றோரிடத்திலிருந்து இயல்பாகப் பெற்றுவிடுகிறது. அதுதான் அதற்கு முதல். அதைக்கொண்டுதான் அது தன் சொந்த வாழ்வென்ற வியாபாரத்தை நடத்தவேண்டும். இந்தப் பிதிரார்ச்சிதமான முதலோடு சமூக சம்பிரதாயத்தையுஞ் சேர்த்தால் கல்வியாகிறது. உலகில் வாழ்வு நடத்துவதற்கு ஏற்ற அறிவையும் அனுபவத்தையும் குழந்தை பெறுகிறது. ஐந்து பெரும் புலன்களும் இந்த அறிவையும் அனுபவத்தையும் பெற எப்பொழுதும் உதவுகின்றன. இது இவ்வளவில் நிற்க, மற்றொரு விஷயம்.

வகுப்பில் ஆசிரியர் புகுந்தவுடன் எத்தனை விதமான குழந்தைகளைப் பார்க்கிறார். எல்லா முகங்களும் ஒரே அமைப்பாயில்லை. எல்லா உடல்களும் ஒரே தினிசாயில்லை. சில குழந்தைகள் உற்சாகமாயிருக்கும். சில சாத்துவிகமாயிருக்கும். சில தூங்கிக்கொண்டிருக்கும். சில சுறுசுறுப்பாயிருக்கும். சில விவேகமுள்ளனவாகவும் சில மந்த புத்தியுள்ளனவாகவுமிருக்கும். இன்னோன்ன எத்தனையோ வித்தியாசங்களைக் காண்கிறோம். இவைகளுக்குக் காரணமென்ன? இவை பெற்றோரிடத்திருந்து பெற்ற பரம்பரைச் சுபாவமாயிருக்கலாம்; அல்லது சூழ்நிலையின் பயனாக உண்டான பழக்கமாயிருக்கலாம். குழந்தையின் இயற்கைச்சுபாவம் இவ்வாறு பெற்றோரிடமிருந்து பெற்ற சில பண்புகளைக் கொண்டதாயிருக்கும். எல்லாக் குழந்தைகளும் ஒரே திறமையும் அமைதியுமுடையனவாய்ப் பிறப்ப

தில்லே. பெற்ருேர் உதவும் பண்பாட்டோடுதான் பிறக்கின்றன. ஒருவன் மற்ெறுருவனிலும் பார்க்க விவேகமுள்ளவனுகவோ மந்த புத்தியுள்ளவனுகவோ இருப்பதற்கு இதுவே காரணமாகும். பெற்ருேர்கள் அப்படியிருப்பதற்கெல்லாம் காரணமென்னவென்று விசாரணை செய்துகொண்டு போவோமானுல் இந்து சமயம் கூறுவது போல அது கர்ம பலனென்றே கூறவேண்டும். உலகத்துத் தாரதம் மியங்களை விளக்குதற்கு இந்து சமயம் கொண்ட கருதுகோள் இது. இது தத்துவ சாத்திர எல்லையைத் தொட்டுவிட்டபடியால் இதில் இப் பொழுது நாம் பிரவேசிக்க வேண்டிய அவசியமில்லை. கல்வியும் சூழ் நிலையும் குழந்தையின் வளர்ச்சியைப் பாதிப்பதற்குமுன் பிறவிக்குணம் அவனுடைய மன அமைப்பு விவேக அமைப்பு ஆகியவற்றை நிச்சயித்து விடுகின்றன. இவ்வாறு குழந்தைக்கு இயற்கையாகக் கிடைத்த விவேகம் உத்தமமானதா மத்திமமானதா அதமமானதா அதமாதம மானதா என்று எப்படி அறிவது? அதையறிந்துகொண்டால் தானே அக்குழந்தையை அதன் விவேகத்துக்கேற்ற வகுப்பில் வைத்துக் கல்வி பயிற்றலாம். பிரெஞ்சுப் போாசிரியரான பீனே என்பவர் இதற் கெனச் சில பொதுவிதிகளைக் கண்டுபிடித்திருக்கிருர். இவற்றின் துணைகொண்டு பத்துவயதுக் குழந்தைக்குப் பன்னிரண்டு வயதுக்குரிய விவேகமோ எட்டு வயதுக்குரிய விவேகமோ வேறு எத்தனை வயதுக் குரிய விவேகமோ உண்டென்பதை அறிந்துகொள்ளலாம். தம்வயதுக்கு அதிகமான விவேகமுள்ள குழந்தைகள் இயல்பாகவே விவேகமுள்ள வர்களென்றும் தம் வயதுக்கு மிகக்குறைவான விவேகமுள்ளவர்கள் இயல்பாகவே மந்த புத்தியுள்ளவர்களென்றும் காணலாம். பரம்பரை யாகக் கிடைத்த பிறவித்திறமைகளை அறிந்துகொண்டால் குழந்தைக்கு எவ்விதமான கல்வியை எப்படிப் பயிற்றலாமென அறிந்து கொள்ளலாம்.

பரம்பரையாக நமக்கென்ன கிடைக்கிறது? தனு கரணம் என்போமா? தனு என்ருல் உடம்பு, கரணமென்ருல் உடம்பிலுள்ள

கருவிகளெல்லாம். நமக்குக் கிடைத்துள்ள நரம்புத்தொகுதி உலகில் அறிவையும் அனுபவங்களையும் பெறுவதற்கு ஏற்றவிதமாக அமைந்திருக்கிறது. வாழ்க்கையில் ஏற்படும் எத்தனையோ விதமான உபாதைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற பிரகாரம் உயிருள்ள ஒவ்வொரு சீவனும் பிரதிக்கிரியை செய்து கொண்டு வருகிறது. இப்பிரதிக்கிரியைக்கு இருப்பிடம் நரம்புத்தொகுதி. இது பெற்றோரிடமிருந்து பெற்ற சம்பத்து. வெளியுலகான சூழ்நிலையிலிருந்து உள்ளத்தைத் தொடும் சம்பவங்களுக்கும் அதற்குப் பிரதியாக உயிர் செய்யும் கிரியைகட்கும் நிலைக்களமாயுள்ளது இந்நரம்புக்கூட்டம்.

வளர்ச்சி பெறாது ஆரம்ப தசையிலுள்ள சில உயிர்கள் வெளியுலகிலிருந்து எவ்வித தீபனமுண்டானாலும் ஒரே விதமான பிரதிக்கிரியையையே செய்கின்றன. இத்தகைய உயிர்களுக்குக் கல்வியோ பயிற்சியோ அவசியமில்லை. சாத்தியமுமில்லை. ஏனெனில் ஒரு அனுபவத்தைக்கொண்டு தமது பிரதிக்கிரியையை மாற்றும் ஆற்றல் இவைகளுக்குக் கிடையா. ஆனால் மனிதனுடைய நிலைமை வேறு. அனுபவத்தினால் தனது பிரதிக்கிரியையை மாற்றவும் திருத்தவும் மனிதனுக்குத் திறமையுண்டு. போதனையாலும் பயிற்சியாலும் பயனடைவதற்கு மனிதன் பெரிதும் தகுதியுடையவன். அனுபவத்துக்கேற்ற பிரகாரம் தனது செயல்களை மாற்றும் குணம் மனிதனிடத்துத்தான் பெரிதும் காணப்படுகிறது. எனவே மற்ற மிருகங்களைவிட மனிதனே கல்வியினால் பெரிதும் பயன் பெறுகிறான்.

மேலும் இயல்பூக்கங்கள் என்று வருணிக்கப்படும் சில தன்மைகள் மனிதனிடத்துண்டு. அவை தனி மனிதரின் பாரம்பரியமல்ல. சாதியிலே நீண்ட காலமாகப் பயின்று அடிப்பட்டு வந்த பரம்பரைக் குணமென்றே கூறவேண்டும். தாய்மை, உணவுதேடல், வெறுப்பு தப்பிக்கொள்ளமுயலல், மந்தையாய் இயலல், இணைவிழைச்சு, போர், தன்னைத்தாழ்த்தல், தன்னைஉயர்த்தல், பொருள் சேகரித்தல், ஆக்கல், சிரிப்பு ஆகிய இவைபோன்ற பல இயல்பூக்கங்களை உளநூலாசிரியர்கள்

விவரிப்பார்கள். மனிதப்பிரவிருத்திகளுள் பெரும்பாலானவை இந்த இயல்பூக்கங்களின் தொழிற்பாட்டினாற்றான் உண்டாகின்றன.

இயல்பூக்கங்கள் பல்லாயிரந் தலைமுறையாகச் சாதியோடுகூடிச் சிறிது சிறிதாயபிவிருத்தியடைந்து வந்தனவென்று குறிப்பிட்டோம். சாதியெவ்வளவுக்கெவ்வளவு அபிவிருத்தியடைந்ததோ அவ்வளவுக்கு இயல்பூக்கங்களும் அபிவிருத்தியடைந்து வளர்ந்தன என்று கூறலாம். எனவே அவை உயிர்ப்பரிணாமம் அல்லது உயிரின வளர்ச்சியோடு சம்பந்தப்பட்டவை. இவ்வுயிர் வளர்ச்சிக்கிரமம் பற்றிய சித்தாந்தமே டார்வின் சித்தாந்தமெனப் பிரசித்தமானது. இதைத்திட்டமாக முதல் முதல் வரையறுத்துக்கூறியவர் டார்வின் (1809–1882) என்பார். உலகத்திலே உயிர்கள் எப்படித் தோன்றின? திடீரென்று ஒரு நாள் மரங்களும் விலங்குகளும் மனிதனும் தோன்றவில்லை. சேற்றுநீரில் மிதக்கும் நுரைபோன்ற ஒரு பொருளிலிருந்தே உயிரானது தோன்றிற்று. அது படிப்படியாக இயக்கமும், சக்தியும், சுதந்திரமும், அறிவும் உள்ள உயிராகப் பல கோடி வருடங்களாக வளர்ச்சியடைந்து மனிதனாக மாற்றமடைந்திருக்கிறது. இந்த உயிர் வளர்ச்சிப்படியில் புல், பூண்டு, செடி, கொடி, மரம், மிருகம், குரங்கு என்பன உயர்ந்து யர்ந்து செல்கின்றன.

முதல் முதல் தோன்றிய உயிரினங்கள் மிக இலேசான உடலமைப்பு உடையவை. அதனால் அதற்கேற்ற சக்தியும் ஆயுளும் பெற்றன. கூண்டுவாழ் புழுக்களும் கடற்செடிகளும் கடற்புழுக்களுந்தான் முதல் உயிர் வர்க்கங்கள். பின்னர் பல கோடி வருடங்கள் கழிந்தபின் கடல் தேள்கள் தோன்றின. இவை அதிக சக்தியும் துரிதமாகச் செல்லுந் திறமையும் உடையவை; ஒன்பதடி நீளமுள்ளவை. இவைக்கு முதுகெலும்பு கிடையா. இதுகாறும் நிலத்திலே எவ்வகையான உயிரினமுந் தோன்றியது கிடையாது. பின்னர் படிப்படியாகப் பல நூதனமான விலங்கினங்கள் தோன்றி மறைந்தன. இவை என்ன விதிக்குட்பட்டு இவ்வாறு பரிணமைமடைகின்றன என்று பார்த்தால்

சில மூலாதாரமான விதிகளைக் கூறலாம். ஒவ்வொரு உயிரிடத்திலும் அபிவிருத்தியடைந்து முன்னேறும் ஒரு ஆசையும் வேகமும் உண்டு. அவ்வேகத்தால் அவை வளர்ச்சியும் இனவிருத்தியும் அடைகின்றன. இந்த இனவிருத்தியால் இயல்பூக்கங்களும் பாரம்பரியப் பண்டமைப்பும் சூழ்நிலையாலும் சொந்த ஆசையாலும் உண்டாகும் உறுப்பு மாறுபாடுகளும் உண்டாகின்றன. இனவிருத்தி அளவுக்கு மிஞ்சினுல் போராட்டமேற்படுகிறது. பலமுள்ளவை உயிர்வாழ்கின்றன. மற்றவை பல அழிந்துபோகின்றன. இது இயற்கைத்தேர்வு எனப்படுகிறது.

உயிர்களிடத்தே அசேதனமான சடப்பொருள்களுக்கில்லாத இரண்டு தனிப்பண்புகளுண்டு. அவை, உண்ணும் உணவைத் தம்மயமாக்குதலும் இனத்தை விருத்திசெய்தலுமாகும். ஆனுல் இனவிருத்தியில் பிள்ளைகள் எல்லா அம்சங்களிலும் பெற்றேரை யொத்திருப்பதில்லை. சில விசேஷ ஒற்றுமைகளும் சில வேற்றுமைகளுமுண்டு. இடத்துக்கேற்றவாறு உயிரின் வாழ்க்கைநிலை மாறுகிறது. அப்படி மாருவிட்டால் அந்த உயிர் அழிந்துவிடும். புதுச் சூழ்நிலைக்கேற்றபடி உயிரில் சில பேதங்கள் தோன்றும். அப்பேதங்கள் அவ்வுயிரின் வாழ்க்கைக்கு உகந்தனவாக இருக்கும். பெற்றேரிடமிருந்து பெற்ற பண்பு வேறுபாடுகளைச் சூழ்நிலை திருத்தியமைத்து விடுகிறது. இதுதான் டார்வினின் இயற்கைத் தேர்வுச் சித்தாந்தம். உயிர்களின் வளர்ச்சியானது வெளிச் சூழ்நிலையினுல் ஏற்படுவது. உயிர்களுக்கு மனமோ இஷ்டமோ இல்லை என்பதே டார்வின் கொள்கை. ஆனுல் லமார்க்கு (1744–1829) என்ற பிரெஞ்சு அறிஞர் இக்கொள்கை தவறென்றும் உயிர்கள் தமது மனதில் தோன்றும் இச்சைப்படி மாறுதலடைய முடியுமென்றுங் கூறினர். இக்கொள்கைப்படி மனிதர் முந்நூறு வருடம் உயிர்வாழ விரும்பினுல் அதை மனதில் தலைமுறை தலைமுறையாகச் சங்கற்பிக்க வேண்டியதுதான். எப்பொழுதோ ஒரு நாள் பல்லாயிர ஆண்டுகளுக்குப்பின் அந்த நிலையை மனிதன் அடைந்தே தீருவான். அதாவது அது ஒரு பரம்பரைச் சுபாவமாக மாறி

விடுமென்பதே இக்கொள்கையின் தாற்பரியம். உயிரானது உள்ளத்தில் உண்டாகும் விருப்பத்தையடைவதற்காகவும் சூழ்நிலைக்கேற்றவாறு தன்னை யமைத்துக்கொள்வதற்காகவும் தனது இயற்கையான சுபாவங்களையும் தேக அமைப்பையுங்கூட மாற்றிக்கொள்ளுகிறது. இவ்வாறான மாற்றங்களை அது தன்னுடைய சந்ததிகட்கும் வழங்கும். அவை அந்த மாற்றங்களைப் பூர்த்திசெய்கின்றன. இவ்வாறே பழைய ஒரு உயிரினத்திலிருந்து புது உயிரினமொன்று தோன்றுகிறது. 'வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்' என்றார் மாணிக்கவாசகர்.

வாழ்க்கைப் போராட்டத்தில் அதாவது இயற்கைத் தேர்வுப் போரில் பலமுள்ளவை உயிரோடு வாழும், தகுதியற்றவை இறந்துபடும் என்பதுதான் டார்வின் கண்ட உண்மை. ஆனால் லமார்க்கின் சித்தாந்தந்தான் தற்போது பேனட் ஷோ, நன் போன்ற அறிஞராலும் கல்வியால் உலகில் முன்னேறலாம் என்று நம்பும் ஆசிரியராலும் பெரிதுங் கைக்கொள்ளப்படுங் கொள்கையாகும். எந்தச் சக்தி குரங்கிலிருந்து மனிதரையுண்டாக்கிற்றோ அதே சக்தி மனிதரிலிருந்து உயர்மனிதரையுண்டாக்கும். இதற்கு மனித இனம் மன உறுதி கொள்ளவேண்டும். 'மனசான்ன பரம் கிஞ்சித்'—அதாவது மனதிலும் உயர்ந்தது வேறில்லை என்று உபநிடதங்கள் கூறும்

நம் மனித இனத்தை மன உறுதியாலும் உள்ளூற உண்டான விருப்பத்தாலும் உயர் நிலைக்கு உய்க்கலாமென்பது உயிர் வளர்ச்சிச் சாத்திரக் கருத்து. இன்று நாம் எந்தக் குணங்களை உயர்ந்தன என்று மதித்து மனதில் பதிக்கின்றோமோ அந்தக் குணங்களைப் பல தலைமுறைகளுக்குப்பின் பரம்பரைக் குணமாகச் சுலபமாய்ப் பெற்றுவிடலாமென்பதுதான் உயிர்நூல் ஆராய்ச்சியாளர் கொண்டுள்ள முடிவு. எதை நினைக்கிறோமோ அது ஆகிறோம். உலகுக்கு இன்று சமாதானம் வேண்டும். அகிம்சையுஞ் சத்தியமுமிருந்தால் உலகில் சமாதானமுண்டாகுமென்ற மூலாதாரமான எண்ணத்தை மனிதர் மனதில் கல்வி

மூலம் பதியச்செய்தால் ஒருகாலத்தில் அவை நமக்கு இயல்பான பரம்பரைக் குணங்களாகவோ இயல்பூக்கங்களாகவோ ஏற்பட்டுவிடு மல்லவா ?

இவ்வாறு உயிர்வளர்ச்சியில் புதிய வேகங்களையு இயல்பூக்கங் களையுமுண்டாக்கி உயர் மனிதராவதற்கு வழியுண்டானபடியாற்ருன் கல்விப் பயிற்சிக்கும் பாரம்பரியத்துக்கும் உள்ள தொடர்பைக் கல்வி யாளர் பெரிதும் மதிக்கின்றனர். சரீர சம்பந்தமான இயல்புகளை மாத்திரம் நாம் பிதிரார்ச்சிதமாகப் பெறவில்லை. பெற்ருேரின் மனப் பண்புகள்கூடப் பிள்ளைகள் வசம் சேருகின்றன. பரம்பரைக் குணத் தினுல் பிள்ளைகள் பாதிக்கப்படுகிருர்கள். அதுபோலவே சூழ்நிலையும் அவர்களைப் பாதிக்கிறது. சங்கீதவித்துவானின் குழந்தைக்குச் சங்கீதம் இலேசாகக் கைவருகிறது. 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பது நம் நாட்டுப் பழமொழி. இது பரம்பரையுஞ் சூழ்நிலையும் சேர்ந்ததால் உண்டாகும் பயன்.

இனி பெற்ருேர் தம் வாழ்நாளில் வருந்தியுழைத்துப் பெற்ற சில பண்பாடுகள் பிள்ளைகளிடமும் வந்துவிடுமா என்ருெரு பிரச்சினையும் விவாதிக்கப்படுகிறது. நேரடியாக இக்குணங்கள் பிள்ளைகளிடம் அமைந்துவிட மாட்டா என ஒருசாரார் வாதிப்பர். ஆனுல் திருவள் ளுவர் கூறுவதுபோல

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவர்க்
கெழுமையு மேமாப் புடைத்து" அதாவது ஒரு பிறவியில் ஒருவன் கற்ற கல்வி அவனுக்கு ஏழு பிறவியிலும் சென்று உதவும் என்று வாதிப்பவர்களுமுண்டு. ஒரு பிறவியில் ஒருவன் கல்வியுடைய வனுயிருந்தால் அவனுடைய ஏழு தலைமுறைக்கும் அது சென்று உதவும் என்று திரித்துப் பொருள்கொண்டால் மக்டுகல் என்ற பிரபல உளநூலாசிரியர் ஆராய்ச்சியின் பயனுகக் கண்ட முடிபுக்கு வந்துவிட லாம். ஒருவனுடைய குலம் அவன் சந்ததிமூலம் நிலைக்கிறது. சந்ததியில் அக்குலத்து ஆதி மகனின் பரம்பரைக் குணங்கள் நிலைத் திருக்கின்றன. இப்படியே ஆராய்ந்து கொண்டுபோனுல் பரம்பரையின் முக்கியமும் கல்வியின் முக்கியமும் இவற்றிடையேயுள்ள தொடர்பும் புலனுகும்.

நவாலியூர் சோ. நடராஜன்

# பிள்ளைகளின் உளத் தேவைகள்.

உள ஆராய்ச்சியின் அபிவிருத்தியைப்பற்றிய வரலாற்றினைப் பரிசீலனைசெய்து பார்க்குமிடத்து முக்கியமான கொள்கைகள் வகுக்கப்பட்டு விளக்கப்பட்ட காலமும், பின்னர் மனிதர் நடத்தையில் அவதானிக்கக்கூடிய விஷயங்களை விளக்குவதில் இப்புதிய கொள்கைகள் எவ்வளவு தூரத்துக்கு உதவிபுரிகின்றன என்பதை அநுபவ சாத்தியமாக அறிந்துகொள்வதற்கு அவை பரீட்சார்த்தமாகக் கையாளப்பட்ட காலமும் இருந்தமை புலனாகும். இக்கொள்கைகள் யாவும் எக்காலத்துக்கும் பொருந்துவனவாகக் காணப்படவில்லை. இவற்றுட் சில விபரீதவுணர்ச்சியால் ஏற்பட்டனவென்பது புலனாயிற்று. வேறு சில குறைவானவையாக அல்லது அவ்வியாத்திக்குற்றமுடையனவாகக் காணப்பட்டமையின், இக்கொள்கைகள் இன்னும் விசாலித்த இயல்பினவாக மாற்றியமைக்கப்படவேண்டியனவாயின ஒரு காலத்தில் பெரிதும் மதிக்கப்பட்ட உளக்கொள்கைகள். பின்னொரு காலத்தில் முற்றாகத் தவிர்க்கப்படலாம். மனித இயல்பை ஆதாரமாகக்கொண்டுள்ள ஒரு சாஸ்திரத்தில் தடுக்க முடியாத சந்தேகம் இருத்தல் கூடுமெனினும், இதுவரை சிறந்த அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். மேலும், காலம் செல்லச் செல்ல உண்மை நிலைமைக்குக் கிட்டச் சென்றுகொண்டிருக்கிறோம் எனவும் கூறலாம்.

உளம் சம்பந்தமான தேவைகள் உண்டு என்னும் கருத்து, உளம் சம்பந்தமான கோட்பாட்டையும் பயிற்சியையும் அண்மைக்காலத்தில் வசீகரித்த மிகவும் பயன்தரும் கருத்தாகும். கல்வித்துறையிலும் ரோக சிகிச்சையிலும் இதனைப் பயன்படுத்துவதால் ஏற்படும்

பலாபலன்கள் இன்னும் பரிசீலனை செய்யப்படுகின்றன. அதன் பொருளடக்கத்தைப் பரிசீலனை செய்வதால் நன்மை ஏற்படும் என்பதற்குப் போதிய அத்தாட்சி உண்டு. மனிதரைச் செயலாற்றும்படி தூண்டும் காரணத்தையும் அவர்கள் நடத்தை முறைகேடுகளையும் விளக்கக் கொண்டுவரப்பட்ட பல கற்பிதக்கொள்கைகளுள் ஒன்றுதான் இந்த உளத் தேவைகளைப்பற்றிய கொள்கையும் என்பதை முதலிற் குறிப்பிடவேண்டும். பல்வேறு கற்பிதக் கொள்கைகளுள் பொருத்தமானவொன்றைத் தெரிந்தெடுப்பதில், தத்துவ சாஸ்திரமும் இயற்கைச் சாஸ்திரமும் மூவகை அளவைமுறைகளைப் பயன்படுத்துகின்றன. அவற்றையே உளநூற்றுறையிலும் பிரயோகித்துப் பார்த்தல் நன்று. எந்தக் கற்பிதக் கொள்கை குறித்தவொரு முறையில் மிகவும் பொருத்தமாகக் காணப்படுகின்றது? எந்தக் கற்பிதக் கொள்கை நாம் அநுபவத்திற் காணும் உண்மைகளுடன் அதிகம் ஒத்துப்போகின்றது? எந்தக் கற்பிதக் கொள்கை மிகவும் பரந்த நோக்கங்களைத் தன்னகத்தே யடக்கியுள்ளது? இந்த அளவைமுறைகளைக் கையாண்டு பார்க்குமிடத்து, இயல்பூக்கத்தை வற்புறுத்தும் மக்டூகலின் கொள்கை, பால் வேற்றுமையை வற்புறுத்தும் புறொய்டின் கொள்கை, கருவித்தாழ்ச்சியை வற்புறுத்தும் அட்லரின் கொள்கை ஆகிய இவற்றிலும் பார்க்க உளத்தேவைகளைப்பற்றிய கொள்கை சிறந்ததாகவே புலப்படும்.

உளத் தேவைகளைப்பற்றிய கொள்கை மிகவும் அண்மையிற்றான் வகுக்கப்படலாயிற்று. டபிள்யு. ஐ. தோமஸ் எனும் அமெரிக்க அறிஞர் நெறிபிறழ்ந்த சிறுமிகளைப்பற்றி அநேக காலம் உளநூல் முறைப்படி ஆராய்ந்தார். அதன்பயனாக இக்கொள்கையை முதன்முதலாக அவர் முறைப்படுத்திக்கூறினார். நெறிபிறழ்தல் எங்ஙனம் உண்டாகின்றது என்ற பிரச்சினையைத் தீர்க்க அவர் கையாண்டமுறை அக்காலத்தில் கையாளப்பட்டுவந்த முறைகளினின்றும் முற்றாக வேறுபட்டதாயிருந்தது. குறித்த ஒரு சிறுமி நெறிபிறழ்வான ஒரு செயலைப் புரிவதற்குரிய காரணங்கள் எவையாக இருக்கக்கூடும் என்பதை நோக்கும்

போது அச்சிறுமியின் இயல்பூக்கங்களில் எவையேனும் தவருனவழியிற் செலுத்தப்பட்டிருக்குமோ என மக்டூகலின் கொள்கைகளைப் பின்பற்று வோர் ஆராய்வதுபோல அவர் ஆராயவில்லை; அல்லது புறொய்ட் போல அச்சிறுமியின் குழந்தைப் பருவத்தில் பாலுணர்ச்சி நசுக்கப்பட்டிருக் குமோ என்பதையும் அவர் ஆராயவில்லை; அல்லது அட்லரைப்போல நெறிபிறழ்ந்த சிறுமியிடம் மறைந்திருக்கும் கருவித்தாழ்ச்சியைக் கண்டுபிடிக்கவும் அவர் முற்படவில்லை. அத்தகைய சிறுமிகளின் வாழ்க்கை வரலாற்று விவரங்களை மிகவும் நுணுக்கமாக அவதானிக் கும் முறையினையே அவர் கையாண்டார். தாம் கருதிய உயர்ந்த இலட்சியத்திலிருந்து அவர்கள் வளர்க்கப்பட்ட முறைகள் எவ்வகை களில் வேறுபட்டிருந்தன என்பதை ஆராய்வதே இவர் கையாண்ட முறை. ஒரு சிறுமியின் வாழ்க்கை வரலாற்றை ஆராயும்போது அவளுடைய விசேட குணங்களைமட்டும் நோக்குவதில் அவர் கருத் தூன்றவில்லை. அவர் அச்சிறுமியின் வீடு, பாடசாலை யெனும் இரு வகைச் சமுதாயச் சூழல்களையும் நன்கு அவதானித்து, அவளுக்கும் அவளுடன் பழகித்திரிந்த மக்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள சமு தாயத் தொடர்புகளையும் நன்கு அவதானித்தார். அவளுக்கும் அவளுடைய பெற்ருர் உடன்பிறந்தார்கட்குமிடையேயுள்ள தொடர்பு களும், அவர்களைப்பற்றி அவள் கொண்டுள்ள மனப்பான்மையும் பரிசீலனை நிகழும் காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் எங்ஙனமிருந்தன என்பதை விசேஷமாக அவதானித்தார். ஒரு சிறுமி வளர்க்கப்படும் முறையில் ஏதாவது குறைபாடு இருப்பதாக அவர் உணர்ந்தால், அதனை இயன்றவரை நிவிர்த்திசெய்து, அதன் பயனுக அவளிடம் காணப்படும் பிரதிச் செயல்களையும் அதன்பின்னர் அவளின் நடத்தையையும் மிகவும் நுணுக்கமாக அவதானித்தார். உதாரணமாக, குழந்தைப் பருவத்தில் ஒரு பெண்ணுக்கு அன்பும் ஆதரவும் அளிக்கப்படாது விடப்பட்டதாக அவர் உணர்ந்தால், அவ ளுக்கு வளர்ந்தவர்கள் அன்பையும் ஆதரவையும் காட்டக்கூடிய ஒரு

சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ள முயன்ருர். அதன்பயனுக அவள் நடத்தையிலும் மனப்பான்மையிலும் மாற்றம் ஏற்பட்டிருப்பதை அவர் கண்டார். மேலும் நெறிபிறழ்ச்சிக்கு வழக்கமாகப் பேர்போன சிறுமிகள்கூட இத்தகைய சூழ்நிலைமாற்றத்தால் திருத்தமுற்று, சமுதாயப்போக்குகளிலுள்ள வெறுப்பைக் கைவிட்டனர். அசேதன உள்ளத்தைப்பற்றி ஆராய்தலும் வகுத்துப்பார்க்கும் ஆசரிப்பும் தேவையற்றனவாகக் காணப்பட்டன. இந்த அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு, ஒருவர் நெறிபிறழ்வுக்குக் காரணம் அவருடைய மூல இச்சைகள் நான்கினையும் பூர்த்திசெய்யச் சமூகம் தவறுவதேயாகும் என்ற கொள்கையை தொமஸ் என்பவர் "சரிப்படுத்த முடியாத சிறுமி" எனும் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

நான்கு மூல இச்சைகளாவன :

(1) புதிய அநுபவம் பெறும் இச்சை
(2) பாதுகாப்பு இச்சை
(3) பிரதி உணர்ச்சி பெறும் இச்சை
(4) மதிப்புப் பெறும் இச்சை

தொமஸ் எழுதிய நூல் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலுமுள்ள வேறு அநேக உளநூலாராய்ச்சியாளரின் கவனத்தை ஈர்த்தது. அவருடைய கொள்கையைப் பொதுவாகப் பலர் ஒப்புக்கொண்டபோதிலும், மூலாதார இச்சைகள் அல்லது தேவைகளின் எண்ணிக்கை, செல்லளவு, அவற்றினிடையேயுள்ள தொடர்பின் முக்கியத்வம் எனும் சில விவரங்களைப்பற்றி, இவ்வுளநூலாராய்ச்சியாளருட் பலர் வெவ்வேறுகொள்கைகளைக் கொண்டுள்ளனர்.

பாதுகாப்புத்தேவை ஒருவரின் உளத் தேவைகளுள் மிகவும் முக்கியமானதாகப் பொதுவாகக் கருதப்படுகின்றது. பாதுகாப்புத் தேவையே ஒரு பிள்ளையின் மூலாதாரமான கிளர்ச்சித் தேவைகளுள் மிக முக்கியமானதெனவும் பாதுகாப்புத் தேவையைப் பூர்த்திசெய்யத்

தவறுவதாலேதான் நடத்தைப் பிரச்சினைகள் யாவும் ஏற்படுகின்றன எனவும் "வீட்டில் பிரச்னைப் பிள்ளை" எனும் நூலில் திரு. எம். பி. சயில்ஸ் காட்டியுள்ளார். பாதுகாப்புத் தேவையைத் திருப்தி செய்யா திருப்பதே அவமதிப்பான நடத்தைக்குச் சர்வசாதாரணமான காரண மாகும் என திரு. எம். மெரில் "நெறிபிறழ்வுப் பிரச்னைகள்" எனும் நூலில் காட்டியுள்ளார். "கல்வி சம்பந்தமான சமுதாய உளநூல்" எனும் புத்தகத்தில் 'தேவைகளும் அவற்றைப் பூர்த்தி செய்தலும், என்பதைப்பற்றி ஸ்ரீமதி சி. எம். வ்ளெமிங் மிக அழகாக வாதித்து, பாதுகாப்புத் தேவையின் முக்யத்வத்தை எடுத்துக்காட்டியுள்ளார்.

பாதுகாப்புத்தேவை என உளநூலறிஞர் குறிப்பிடும்பொழுது, அவர்கள் எதைக் கருதுகிறார்கள் என்பதைக் கவனிப்பாம். ஒருவர் தமது சூழ்நிலையில் கூச்சமின்றி நடந்துகொள்வதுதான் பாதுகாப்பு எனப்படும். அநேக அம்சங்கள் ஒருங்குசேர்வதால்தான் இவ்வித அகன்ற கருத்தில் பாதுகாப்பை ஏற்படுத்த இயலும். இவற்றுளெ ல்லாம் மிகவும் முக்கியமானது எதுவெனில், ஒருவர் தம்முடன் ஊடாடும் கூட்டத்தினரால் நேசிக்கப்பட்டு அவர்களால் ஏற்றுக்கொள் ளப்படுதலை விரும்புகின்றார் என்பதே.

வளர்ந்தவர் ஒருவர் விஷயத்தில், அவருடைய குடும்பத்தினர், அவர் வேலைசெய்யும் இடத்திலுள்ள சகபாடிகள் (மேலதிகாரிகள், கூட்டாளிகள், கீழ் வேலையாட்கள்) அவர் அங்கத்தவராயிருக்கும் சமூகச் சபைகளிலுள்ள அவருடைய தோழர்கள் எனப்படுவோரையே அவரோடு சம்பந்தப்பட்ட கூட்டத்தினர் எனப் பொதுவாகக் கூற லாம். ஒருவர் பாதுகாப்பு என்பது இதுவென அநுபவவாயிலாக உணர்ந்துகொள்வதற்கு முன்னர், அவருடைய குடும்பத்தின் அன்பும் ஆதரவும் அவருக்கு அத்தியாவசியம். தாம் அக்குடும்பத்தைச் சேர்ந்தவர் எனவும், தம் சுகவாழ்வும் சந்தோஷமும் குடும்பத் தின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் முக்கியமானவையெனவும், குடும்ப

விஷயங்களில் ஆலோசனைகூறுவதில் தம் அபிப்பிராயமும் நன்கு மதிக்கப்படுகிறது எனவும் அவர் உணர்ந்துகொள்ளல் அவசியம். மேலும் தாம் சொல்வதை மேலதிகாரிகள் ஏற்றுக்கொள்கின்றனர் எனவும், தம் தகைமையைக் கௌரவிக்கிறார்கள் எனவும், தம்முடைய தனித் தன்மைக்கு மதிப்புக்கொடுக்கிறார்கள் எனவும் அவர் உணர்ந்துகொள்ளல் அவசியம்; அவருக்குக் கீழுள்ள உத்தியோகத்தர்கள் அவருக்கு மரியாதை செலுத்தி அவர் சொல்வதை அன்புடன் ஏற்றுக்கொள்கின்றனர் எனவும், சமூகச் சபைகளிலும் வேலைசெய்யும் இடத்திலும் அவருடைய சகபாடிகள் தங்களுள் ஒருவராக அவரைக் கருதி, தங்களுடைய பொது இலட்சியத்தை அடைவதில் அவர் புரியக்கூடிய தொண்டினை அங்கீகரித்து நன்மதிப்புக் கொடுக்கிறார்கள் எனவும் அவர் உணர்ந்துகொள்ளல் அவசியம். இவ்வித தேவைகள் யாவும் பூரணமாகத் திருப்திசெய்யப்படுவதிலேதான் அவருடைய பாதுகாப்புத் தேவை பூர்த்தியாதல் தங்கியிருக்கிறது.

ஒரு குழந்தையின் விஷயத்தில் இங்ஙனம் பகுத்துக்காணவேண்டுமெனினும், முற்றாக இம்முறையினைத் தழுவ இயலாது. எல்லாவற்றிலும் மேலாக ஒரு குழந்தைக்குப் பெற்றாரின் அன்பு அத்தியாவசியம். பெற்றார் தன்னை அன்புடன் ஏற்றுக்கொள்கிறார் எனக் குழந்தை உணர்தல் வேண்டும். குழந்தைகளுக்கு அன்பு காட்டாமலும், அவர்கள் வேண்டப்படாதவர்கள் என்ற உணர்ச்சியை அவர்களுக்கு வருவித்தும் சில இடங்களில் பெற்றார் நடந்துகொள்வதுண்டு. இது பெரும்பாலும் மேனாட்டிற்றான் காணப்படும். கலியாணஞ் செய்துகொண்டதன்பயனாகப் பிள்ளைகள் பிறக்கக்கூடும். அவர்கள் பிறந்ததால் பிள்ளைப்பேற்றைக் கட்டுப்படுத்தப் புருஷன் மனைவி கொண்டிருந்த தீர்மானம் பாதிக்கப்பட்டிருக்கலாம். குடும்ப வருவாயைக்கொண்டு பிள்ளைகளைத் தாபரிப்பது அசாத்தியமாகவிருக்கலாம்; பெற்றாரின் சமுதாய வைபவங்களுக்கு அக்குழந்

தைகள் தடையாக இருக்கலாம். பெற்றேர் தம் மனேபாவத்தால் பிள்ளைகளைத் தள்ளிவிடுவதற்குரிய காரணங்களுட் சிலவை மேற் கூறப்பட்டவை. குழந்தையை உடம்போடு முற்றாகக் கைவிட்டுவிடுவது சில இடங்களில் காணப்படுகின்றதெனினும், மனேபாவத்தால் தள்ளிவிடும் சந்தர்ப்பங்களிலும்பார்க்க இது குறைவாகவே காணப்படுகின்றது. தள்ளிவிடும் மனேபாவத்தின் பயனுக ஏற்பட்டுள்ள வேண்டா வெறுப்பான சூழலில் ஒரு குழந்தையைத் தம்மோடு வைத்துக் கொள்வதிலும்பார்க்க அக்குழந்தையைக் கண்ணுக்கெட்டாத தூரத்தில் கைவிட்டுவிடுவதால் குறைவான கெடுதியே உண்டாகும்.

குழந்தைகளுக்கு அன்பும் ஆதரவும் அளிக்காது மறுக்கப்படுதற்கு யாம் மேலே விவரித்துள்ள காரணங்கள் குறிப்பிடத்தக்க அளவுக்குக் காணப்படாதிருப்பினும், தன்னைத் தேவையில்லை, தனக்கு அன்பு காட்டப்படுவதில்லை, தன்னைப்பற்றிய கவலை தன் பெற்றேருக்கில்லை என்ற எண்ணம் ஒரு குழந்தையின் மனதில் உண்டாகத்தக்கதாக அதன் பெற்றேரின் மனப்போக்கு, வெளிப்படையாக வேனும் மறைமுகமாகவேனும் தோன்றுதலும் உண்டு. உதாரணமாக ஒரு பிள்ளை பாடசாலையில் நன்றாகப் படிக்காவிட்டால், பெற்றேர் அப்பிள்ளைமீது அன்பற்ற மனப்பான்மையைக் காட்டுகின்றனர். தன் முகத்தோற்றத்துக்கு அல்லது மூக்கின் அமைப்புக்கு எவ்வாறு ஒரு பிள்ளை பொறுப்பாளியாகவில்லையோ, அவ்வாறே படிப்பில் சித்திபெறுவதற்கு வேண்டிய இயற்கைப் புத்தி அல்லது திறமை குறைந்திருப்பதற்கும் அவன் பொறுப்பாளியல்லன் என்பதை அநேக பெற்றேர் அறிந்து ஏற்றுக்கொள்வதில்லை. தகுதியான சூழ்நிலை யளிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கப்பெறின், தனது புத்தியையும் சுபாவத்தையும் நன்கு பயன்படுத்தல் ஒரு பிள்ளையின் கடமையென்பது உண்மைதான். எனினும் ஒரு பிள்ளையின் அபிவிருத்தியில் பெற்றேரின் தூண்டுதலுக்கும் மேற்பார்வைக்கும் இடமுண்டு. மகவன்பு இவற்றேடு தொடர்பற்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல்

வேண்டும். அவ்வன்பானது ஒரு பிள்ளை படிப்பில் சிறந்து விளங்குவதற்கும் குறைந்து தாழ்வுறுதற்கும் ஏற்பக் கூடியும் குறைந்தும் காணப்படுதல் கூடாது. ஒருவனை உலகம் எவ்வளவுதூரம் மதிக்கின்றதென்பது, செல்வம், ஆற்றல், குணம் என்பவற்றிற்கேற்ப அவன் வகிக்கும் நிலைமையைப் பொறுத்துள்ளது. ஆனால் மகவு அன்பு தானாக ஊற்றெடுக்கவேண்டும்; தானாகவே தூண்டப்படவேண்டும். இரு திறத்தினர்க்குமிடையே இயற்கையாகவுள்ள தொடர்புபற்றி அமையவேண்டும். பாடசாலையில் பிள்ளைகள் செய்யும் தவிர்க்கக்கூடிய தவறுகளை அல்லது வேண்டுமென்று செய்யும் தவறான செயல்களைப் பாராமல் கண்மூடிக்கொண்டு இருக்கவேண்டுமென யாம் கூறவரவில்லை. பிள்ளையைக் கண்டியுங்கள்; ஆனால் அங்ஙனம் செய்யும்போது பிள்ளையை முற்றாக நிந்தித்தாவது உங்கள் அன்பைக் காட்ட மறுத்தாவது விடாதீர்கள். அவன் புரிந்த யாதேனுமொரு செயலை நீங்கள் விரும்பவில்லையெனக் கூறலாம். ஆனால் அவனையே விரும்பவில்லையென்று கூறுவது தகாது. ஒவ்வொரு செயலையும் தனித்தனியாகக் கவனித்தல் வேண்டும். ஒரு செயலுக்காக அவன்மீது, நீங்கள்காட்டும் மனப்பான்மை முழுவதுமே மாறக்கூடாது. இவையெல்லாவற்றையும் விட, அவன்மீது அடிக்கடி குற்றங்கண்டுபிடித்து, அவனைப்பற்றி உங்களுடைய சிநேகிதர்களுடனும் இனத்தவர்களுடனும் குறைவாகப் பேசவேண்டாம். இளமையும் மென்மையும் ஒருங்கமையப்பெற்றவனாக இருக்கும் அந்தப்பிள்ளை, கௌரவமாக நடத்தப்படுவதை அவாவிநிற்கும் மென்மையுள்ளதும் விருத்தியடைவதுமான தனியியல்பைக்கொண்டவனாக இருக்கிறான். ஒருவருடைய பிள்ளையில் ஏதோ குறைபாடு இருக்கிறதென்பதைப்பற்றி அறிதலில் இயற்கைக்குமாறாக இன்பம் துய்க்கும் மனிதருடன் அப்பிள்ளையைப்பற்றிக் கலந்து பேசுதல் எவ்வித நன்மையையும் பயவாது. பாடசாலைகளில் பிள்ளைகள் நன்கு சித்தியடையாமை சம்பந்தமாக, அவனை உற்சாகப்படுத்தி, கடைசியில் அவன் சித்திபெறுவான் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை

யுண்டென்பதைச் சொல்லிக் காட்டவேண்டும்; அவனுடைய விசேஷ குறைபாடுகளை நன்கு பரிசீலனைசெய்ய ஒழுங்குசெய்து, அவற்றை நிவிர்த்திசெய்வதற்கேற்ற சந்தர்ப்பத்தை அவனுக்கு அளிக்கவேண்டும்; அங்ஙனம் அளிக்கப்பெற்ற சந்தர்ப்பங்களை அவன் பூரணமாகப் பயன் படுத்தித் தன்வேலையில் அயரா முயற்சியுடன் உழைக்கின்றானோ எனக் கண்டிப்பாகவும் நியாயமாகவும் பார்த்துக்கொள்வதே சிறந்த நன்மை பயக்கும்முறை. இங்ஙனம் செய்வது, அப்பிள்ளையைத் தண்டித்தும், அவனில் குற்றங்கண்டும், பிறர் அவனை ஏளனஞ் செய்யவிட்டும் நடத்தும் முறையிலும் பார்க்கச் சிறந்தது. அத்துடன் இம்முறை அப்பிள்ளையின் உள இயல்பை ஊறுபடுத்தாமலுமிருக்கும். மேலும் நிலையானதும், பாதுகாப்பானதுமான ஒரு எல்லையுள் மறுமலர்ச்சி ஏற்படச் சந்தர்ப்பம் அளிப்பதாகவும் முடியும்.

மகவு அன்புக்குறைவுதான் உளத்தில் காப்பின்மை உணர்ச்சி ஏற்படுவதற்கு மிகவும் பிரதான காரணம் எனலாம். இயன்சற்றி என்பவர் எழுதிய "அன்புக்கும் பகைக்கும் மூலம்" எனும் நூலுக்கு டக்டர் ஜே. ஏ. கட்பீல்ட் எழுதிய முகவுரையில் பின்வருமாறு கூறுகின்றார்: "பாலப்பருவத்தில் காணப்படும் ஒழுங்கீனங்களுட் பல, பாதுகாப்பு, அன்பு ஆகிய இவற்றின் குறைபாட்டிலிருந்தே எழு கின்றன எனக்கருதுகிறோம்". மகவு அன்புக் குறைபாட்டுக்குப் பரிகாரம் தேடிக்கொள்வது மிகக் கஷ்டம். ஏனெனில் பிறர் இவ் விஷயத்தில் எவ்வித உதவியும் செய்யமுடியாது. தாயிடமிருந்து பிள்ளை வேறோரிடத்தில் பிரிந்திருத்தலால், அது பிள்ளையின் மனதிலே அழியாது பதிந்துவிடும் அதிசய அநுபவமாகமாறி, உளத்தில் பாது காப்பின்மை உணர்ச்சியை உண்டாக்கிவிடும். "பிரித்துவிடுவதால் குழந்தைகளில் ஏற்படும் மனக்கிலேசம்" எனும் நூலில் திரு. எச். எடில்ஸ்ரன் அவர்கள், தாய்மாருடன் இருக்காது பிரிக்கப்பட்டு ஆஸ் பத்திரிகளில் அநேக காலத்தைக் கழித்த பிள்ளைகளில் உளப்பாது காப்பின்மையுணர்ச்சியால் ஏற்பட்ட பலாபலன்களை விவரித்துள்ளார்.

தாயிடமிருந்து பிள்ளையைப்பிரித்து வைத்தல் மிகவும் பெரிய சத்திர சிகிச்சை செய்தலுக்கு ஒப்பாகும் என மெலிற்ரு ஸ்கிமிட்பேக் தாம் எழுதிய "தேவை வேண்டும் பிள்ளைகள்" எனும் நூலில் கூறுகிறார். பெற்றோர்களிடமிருந்தும் நன்கு பழகிய சூழலிலிருந்தும் பிள்ளைகளை வெளியேறச்செய்தால், அவர்களுக்கு ஏற்படும் தாக்கம் விமானத் தாக்குதலால் அவர்களுக்கு உண்டாகும் விளைவிலும் பார்க்க மிகக் கொடியது என்பது ஆராய்ச்சியின் பயனாகத் தெரியவந்தது என "வெளியேற்றுவதாலும் ஆகாயத்தாக்குதலாலும் நகரத்துப் பிள்ளைகளுக்கு ஏற்படும் பயன்" என்ற கட்டுரையில் டபிள்யு. எம். பெரி கூறுகிறார்.

மகவு அன்பு போதிய அளவுக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த விடத்தும், ஒழுகலாற்றில் ஒவ்வாமை காணப்படுமாயின் அப்பொழுது பாதுகாப்பின்மை உணர்ச்சி உண்டாதல் கூடும். ஒழுகலாறு சம்பந்தமாகத் தாயும் தகப்பனும் வேறுபட்ட கொள்கையுடையவர்களாக இருப்பின், பிள்ளையினுடைய மனத்திலும் பெரிய முரண்பாடு ஏற்படும். எனவே சிறந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும்படி வற்புறுத்தும் தாயிலோ தகப்பனிலோ அந்தப்பிள்ளை வெறுப்படைந்து வருதல்கூடும். ஒரு செயலை அங்கிகரித்தலையும் அங்கிகரியாது விடுதலையும் பெற்றார் தம் மனத்தேயுள்ள ஒரு கொள்கையின்படி செய்யாது நேரத்துக்கு நேரம் உள்ள மனப்பான்மைப்படி செய்துவருதல், ஒழுகலாற்றிலுள்ள ஒவ்வாமைக்குப் பிறிதோர் உதாரணமாகும். இத்தகைய நிலைபேறற்ற சூழலில், பிள்ளைக்கு இன்னதுதான் செய்யவேண்டுமென்பது திட்டமாகத் தெரியாதுபோய், உளத்தில் பாதுகாப்பின்மை உணர்ச்சி குடிகொள்கின்றது. பெற்றாருக்குள் இணக்கமின்மையும் அவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிடுதலும் பிள்ளைகளிடத்தே உளப்பாதுகாப்பின்மை உணர்ச்சி உண்டாவதற்குரிய சாதாரணகாரணமாகும். அத்தகைய பெற்றார் ஒன்றாக இருந்து நாயும் பூனையும்போல எப்பொழுதும் சண்டையிடுவதிலும்பார்க்க, அவர்கள் பிரிந்து வாழ்வது பிள்ளைக்கு நல்லது.

ஒரு பிள்ளைக்கும் அவனுடைய சகோதர சகோதரிகளுக்குமிடையேயுள்ள சமுதாயத் தொடர்புகள் மிகவும் பிரதானமானவை. எவ்வகையான நெருக்கடியும் பிள்ளையின் பாதுகாப்பு உணர்ச்சியை அலைத்துவிடக்கூடும். உதாரணமாக, மூத்த சகோதரர் அல்லது மூத்த சகோதரிகள் இளைய பிள்ளைமீது நாட்டாண்மைகாட்டுதல், அல்லது அவனுடைய குறைபாடுகளுக்காக அவனை நிந்தித்தல், அப்பிள்ளையின் மானத சுகத்தை நிரந்தரமாகப் பாதிக்கக்கூடும். ஒரு பிள்ளையின் உடன்பிறந்தார் அப்பிள்ளைக்கு அன்பும் ஆதரவும் காட்டி, அவனும் தங்களுள் ஒருவன் என உணரச் செய்து, அவனுடைய நன்மை தங்கள் நன்மையளவு பேணத்தக்கது, பொது நன்மைக்கான விஷயங்களில் அவனுடைய ஆலோசனைகள் முறையாகக் கவனிக்கப்படும் எனக் காட்டிக் கொண்டாலன்றி, அப்பிள்ளை தனக்குப் பாதுகாப்பு உண்டென்பதை உணரமாட்டான். அவன் தன் சொந்த ஆற்றலையும் குணத்தையும் மதிப்பிடுதல், அவனுடைய சகோதர சகோதரிகள் அவன் ஆற்றலையும் குணத்தையும் கௌரவிப்பதிலேயே தங்கியிருப்பதால், அவனைப்பற்றி அவர்கள் கொள்ளும் மனப்பான்மை அப்பிள்ளையின் அபிவிருத்திக்கு முக்கிய காரணமாகும். படிப்பில் சிறந்த சித்திபெற்ற மூத்த சகோதரனுடன் அவனுடைய இளைய சகோதரனைப் பெற்றோர் ஒப்பிட்டுப்பார்க்கும் துரதிஷ்டவசமான வழக்கம் ஒன்றிருப்பது விசேஷமாகக் குறிப்பிடத் தக்கது. மூத்தவனைச் சிறந்த எடுத்துக் காட்டாக மற்ற இளையவர்கள் பின்பற்ற வேண்டுமென்கின்றனர். இளைய பிள்ளைகளுக்கு மூத்த சகோதரனுடைய இயற்கையாற்றல்களில் அரைவாசியளவுதானும் இல்லாதிருந்த போதிலும், இளைய சகோதரர்களும் மூத்த சகோதரனைப்போலவே சிறந்து விளங்கவேண்டுமெனப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மூத்த சகோதரனைப் போலச் சித்தியெய்தத்தவறிய இளைய சகோதரர்கள் சில சமயங்களில் நிந்திக்கப்பட்டு வெட்கத்துக்காளாவது மட்டுமன்றி, அவர்களை ஒதுக்கிவிடும் மனோபாவமும் பெற்றோரிடத்தே தோன்றும்.

(தொடரும்)

ஜே. ஈ. ஜயசூரிய.